2021 பிப்ரவரி 27]

அருளால் மக்கள் பணி ஆற்றுகின்ற வகையிலே, இன்றைக்கு அவர் இறைவனுடைய அருளால் மீண்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய கருணையினாலே, மீண்டும் அவருடைய பணிகளைத் தொடர இறைவனை வேண்டி, இந்தக் கேள்விக்கான பதிலை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர், அருமைக்குரிய அண்ணன் திரு. தூசி கே. மோகன் அவர்களுடைய கோரிக்கை உடனடியாக துறைக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டுமென்று நான் காத்திருந்தேன். ஏனென்று சொன்னால், அவர் மனதிலே இருப்பதையெல்லாம் இந்த அவையிலே பேச வேண்டும் என்று நான் பொறுத்திருந்தேன். இன்றைக்கு அவர் கேள்விகளுக்கும் பதிலளித்து, தன்னுடைய கடமையை நிறைவேற்றியிருக்கிறார்கள். அவருக்கு கொரோனா நோய்த் தொற்று ஏற்பட்டதை அறிந்து நான் மிகவும் வேதனையடைந்தேன். அவருடைய மகனை உடனடியாகத் தொடர்பு கொண்டு, நலம் விசாரித்தேன். இன்றைக்கு அவர் நலம்பெற்று, இந்த அவைக்கு வந்து பதிலளித்ததைக் கேட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இறைவன் உள்ளார்; மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியும் அவருக்கு உண்டு; மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பாசமும் உண்டு; மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் நேசமும் அவருக்கு உண்டு. எனவே, அவர் பல்லாண்டு வாழ வேண்டுமென்று இந்த அவையின் சார்பாக அவரை நான் வாழ்த்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

[2021 பிப்ரவரி 27

46—

கால்நடை மருந்தகம்

***63191—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, நுள்ளிவிளை ஊராட்சி, கண்டன்விளையில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பல்வேறு சாதனைகள் படைத்து, இந்தியாவிற்கே முன்னோடியான துறையாக கால்நடை பராமரிப்புத் துறையை உருவாக்கியிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். தமிழகத்தினுடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். இன்றைக்கு குளச்சல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற அந்த வினா துறைக்கு அனுப்பி வைக்கப்படும் என்ற தகவலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்கள்.*

முற்பகல் 10–40

திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னையும், தமிழக மக்களையும், எல்லோரையும் வாழவைத்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா ஆகிய இரு தெய்வங்களையும் வணங்குகிறேன். இன்றைக்கு நம்மையெல்லாம் வழிநடத்தி, இந்தியாவிலேயே தமிழகம்தான் முதலிடம் என்று இந்தியாவே திரும்பிப் பார்க்கக்கூடிய அளவில், இன்று அம்மா அவர்களுடைய*

2021 பிப்ரவரி 27]

அரசை சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். அவருக்கு உற்ற துணையாக இருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகின்றேன்.

அதேபோன்று, இந்த 15–வது சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில் நாங்கள் கொடுத்த கோரிக்கைகளைப் பரிசீலித்து, எங்களுக்கு எல்லாவிதத்திலும், அவற்றை நிறைவேற்றிக் கொடுத்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும் வணங்குகிறேன். என்னோடு பணி செய்த சக சட்டமன்ற உறுப்பினர்களையும், பத்திரிகை துறை நண்பர்களையும் வணங்குகின்றேன்.

நம்முடைய அம்மா அவர்கள் ‘இன்னும் 100 ஆண்டுகளானாலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் ஆட்சி செய்யும்’ என்று சூளுரைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை நிறைவேற்றிக் காட்ட வேண்டும்; அதை நிரூபித்துக் காட்ட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், உறங்காமல், சாப்பிடாமல், இரவு–பகல் பாராமல் உழைத்துக்கொண்டிருக்கிறார்கள். அம்மா அவர்கள் 20 மணி நேரம் உழைத்தார்கள்; நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களும் அதே வழியில்நின்று உழைக்கின்றார்கள்; அவர் உறங்குவதே எனக்குத் தெரியவில்லை. அந்தளவிற்கு அம்மா அவர்களுடைய அரசை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டு வர வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு இன்றைக்கு ஊண், உறக்கம் இல்லாமல் உழைத்துக் கொண்டிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு நல்ல உடல் ஆரோக்கியத்தையும், வலிமையையும் கொடுக்க வேண்டுமென்று இறைவனை வேண்டிக் கொள்கிறேன். இந்தச் சபையை நெறிபிறழாமல் இந்த அளவிற்கு நடத்திக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு சபாநாயகர் அவர்களையும், மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களையும், அண்ணன் அரசுக் கொறடா அவர்களையும் வணங்குகின்றேன்.

என்னுடைய தென்காசி சட்டமன்றத் தொகுதியில், ஆலங்குளம் ஒன்றியத்திற்குட்பட்ட மருக்கலான்குளம் கிராமத்தில் மட்டும், மக்கள்தொகையை எடுத்துக்கொண்டால், 3,000 பேருக்குமேல் இருக்கின்றார்கள்; மாடுகள் மட்டுமே தோராயமாக 6,500 இருக்கின்றன. இதுபோக, ஆடுகள் தனியாகவும், கோழிகள் தனியாகவும் உள்ளன. அந்தக் கிராமத்தைச் சுற்றி, கிட்டத்தட்ட

30 கிராமங்கள் உள்ளன. மொத்தமாக, எல்லா வீடுகளிலும் உள்ள கால்நடைகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டால், 20,000–க்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்றன. அதனை யூனிட் கணக்கில் சொல்வார்கள். அது என்ன என்பது எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும்கூட, மாடுகளின் எண்ணிக்கையை மட்டுமாவது கருத்தில்கொண்டு, மருக்கலான்குளம் கிராமத்தில் கட்டாயம் கால்நடை மருந்தகம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்தாண்டு காலம் எங்களுக்கெல்லாம் நல்ல ஆக்கமும், ஊக்கமும் கொடுத்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

நம்முடைய தென்காசி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கோரிக்கை துறைக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் காவல் தெய்வங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா ஆகியோருடைய பொன்னடிகளைப் போற்றி வணங்குகிறேன். தமிழக மக்களினுடைய இல்லங்களில் நாள்தோறும் தங்க சிம்மாசனம் போட்டு அமர்ந்திருக்கின்ற ஒப்பற்ற முதலமைச்சராக, தமிழகத்தினுடைய முதலமைச்சர் அருமை அண்ணன் மாண்புமிகு எடப்பாடியார் அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கின்றார்கள். நேற்றையதினம், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களினுடைய வாழ்வாதாரத்திற்கு வலு சேர்க்கின்றவகையில், உள் ஒதுக்கீடு வழங்கியிருக்கிறார்கள். அவர்கள் 1985 ஆம் ஆண்டிலிருந்து தங்களுடைய உரிமைகளுக்காகப் போராடிய நேரத்தில், நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு, கருணைப் பார்வையோடு அவர்களை அரவணைத்து, நீதிபதி ஜனார்த்தனம் அவர்கள் தலைமையிலே*

ஒரு குழு அமைத்தார்கள். அந்தக் குழு தனது அறிக்கையை அரசின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்க வேண்டுமென்று அறிவுறுத்தி, இன்றையதினம் அந்த அறிக்கையினை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெற்று, விவசாய நிலங்களிலே உழுது கொண்டிருக்கின்ற, வியர்வையை சிந்திக் கொண்டிருக்கின்ற, நாளும் பல்வேறு நிலைகளிலே சுதந்திரப் போராட்டக் காலங்களிலிருந்து இன்றுவரை, தமிழக முன்னேற்றத்திற்கு பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற வன்னியர் குல சத்திரியர்களுக்கு 10.5 சதவிகித உள் இட ஒதுக்கீட்டினை கருணைப் பார்வையோடு, தாய் உள்ளத்தோடு வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து சமூக மக்களுடைய பாதுகாவலராகவும், ஒடுக்கப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுடைய போர் வாளாகவும் விளங்குகிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு என் சார்பாகவும், என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும், ஒருங்கிணைந்த தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள மக்கள் சார்பாகவும், வன்னியர் குல சத்திரிய மக்களின் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–45

அதேபோன்று, அதிலே சீர்மரபினருக்கு 7 சதவிகிதமும், இதர மிகவும் பின்தங்கியிருக்கக்கூடிய மக்களுக்கு 2.5 சதவிகிதமும் இட ஒதுக்கீட்டினை வழங்கி, அனைத்து சமூக மக்களுடைய பேரன்பினைப் பெற்றிருக்கின்ற, 2021–ல் நடைபெறுகின்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று, மீண்டும் தமிழக முதலமைச்சராக மகுடம் சூடி, இங்கே பதவியேற்கவிருக்கின்ற நம்முடைய ஒப்பற்ற முதலமைச்சராக விளங்குகிற அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அவருக்கு உற்ற துணையாக இருக்கின்ற தமிழகத்தினுடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறையினுடைய அமைச்சர், ஆற்றல் மிகுந்த அருமை அண்ணன் திரு. சி.வி. சண்முகம் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். அந்தத் தொகுதியில்

[*2021 பிப்ரவரி 27*

குஞ்சமேடு என்கின்ற பகுதி இருக்கின்றது. அங்கே ஒரு கால்நடை மருந்தகம் வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இன்றைக்கு இந்தியாவிற்கே வழிகாட்டக்கூடிய துறையாக தமிழகத்திலே கால்நடைத் துறை விளங்கிக் கொண்டிருக்கின்றது. தெற்காசியாவிலேயே பிரம்மாண்டமான கால்நடை ஆராய்ச்சிப் பூங்கா என்று சொன்னால், அது நம்முடைய தமிழகத்தில்தான் இருக்கிறது என்று சொல்லும் அளவிற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முத்திரை பதித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சாதனையை நோக்கி பயணிக்கின்ற இந்தப் பொன்வேளையில், குஞ்சமேடு பகுதியில் இருக்கக்கூடிய அந்த மக்களுக்கு ஒரு கால்நடை மருந்தகம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. முருகுமாறன் அவர்களது கோரிக்கை துறைக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி அவர்கள்.*

திரு. ஆ. கோவிந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும் வணங்குகிறேன். வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் நாம் என்ன தேர்தல் அறிக்கை கொடுக்கப் போகிறோமோ என்று எதிர்க்கட்சியினர் அஞ்சிக் கொண்டிருக்கின்றார்கள். ஏனென்றால் அவர்கள் அறிக்கைமூலம் சொல்கின்ற கோரிக்கைகள் அனைத்தையும் நாட்டு மக்களுக்கு நிறைவேற்றியுள்ளது, நம் அரசு. நேற்று பார்த்தீர்கள் என்றால், கூட்டுறவு வங்கிகளில், மகளிர் சுய உதவிக் குழு வாங்கிய கடன்கள் தள்ளுபடி, விவசாயிகளின் அனைத்து பயிர்க் கடன்கள் தள்ளுபடி, நகைக் கடன் தள்ளுபடி என்று இந்த சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. உண்மைக்கு மாறாகச் சொல்லி கடந்த தேர்தலில் வாக்குகளை*

2021 பிப்ரவரி 27]

வாங்கியவர்களுக்கு மத்தியில், உண்மையாகவே நாங்கள் கொடுக்கிறோம் என்று வாரி வழங்கிய வள்ளல், அண்ணன் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேவேளையில், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். எங்கள் மண்ணின் மைந்தர், எங்கள் மாவட்டக் கழகச் செயலாளர், மாண்புமிகு அண்ணன் உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

எங்கள் தொகுதிக்குட்பட்ட வடகரை பகுதியில் ஒரு கால்நடை மருத்துவமனை வேண்டுமென மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அந்தப் பகுதியில் கால்நடை அலகுகள் அதிகமாகத்தான் இருக்கின்றது. அந்தப் பகுதிக்கு நிச்சயம் கால்நடை மருத்துவமனை கொடுக்க முடியும் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். எனவே, அந்தப் பகுதியில், ஏதாவது ஒரு வழியில் கால்நடை மருத்துவமனையினை அமைத்துத் தர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். தற்போது, வடகரையிலிருந்து 8 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள கால்நடை மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருப்பதால், அங்கு ஒரு கால்நடை மருந்தகம் அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமாய் தங்கள் வாயிலாக மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை துறைக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. சி.வி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலில் போட்டியிட இந்த எளியவனான எனக்கு வாய்ப்பளித்து, வெற்றிபெறச் செய்து, இந்த 15–வது சட்டமன்றப் பேரவையில் உரையாற்றுகின்ற வாய்ப்பினை வழங்கிய, 'அமைதி, வளம்,*

வளர்ச்சி' என்ற சீரிய சித்தாந்தத்தோடு தமிழகம் முதன்மையான மாநிலமாக மாற வேண்டுமென்பதற்காக, "எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும்; இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்" என்று நல்லாட்சி தந்து மறைந்த, நம் எல்லோருடைய இதயங்களிலே நீக்கமற நிறைந்திருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். அம்மா அவர்களின் மறைவுக்குப் பின்னர், மாண்புமிகு அண்ணன் அவர்கள் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து, துரோகிகளின் சதிகளை தன்னுடைய மதிநுட்பத்தால் முறியடித்து, எதிரிகளின் 13,000-க்கும் மேற்பட்ட போராட்டங்களையெல்லாம் வென்று, இன்றைக்கு மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்தி, மக்களுக்கு என்னென்ன தேவை என்பதை அறிந்து, மக்களுடைய எதிர்பார்ப்புகளையெல்லாம் நிறைவேற்றியிருக்கிறார். வேளாண் சிறப்பு மண்டலம் கொடுத்த முதலமைச்சர்; குடிமராமத்து நாயகன்; விவசாயிகளின் தோழன்; அரசுப் பள்ளிகளில் படித்த மாணவர்களின் மருத்துவக் கனவை நிறைவேற்ற 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்த முதலமைச்சர்; காவேரியை மீட்டெடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள்தான் 2021 ஆம் ஆண்டு நடைபெறும் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் தமிழ்நாட்டின் முதலமைச்சராக வருவார் என்பதைக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-50

என்னுடைய பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் நிறைவேற்ற வேண்டிய பணிகளைச் செய்து தருமாறு நான் கோரிக்கை வைத்தேன். அங்கே தடுப்பணைகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள்; மருத்துவக் கல்லூரியை எங்களுடைய மாவட்டத்திற்கு வழங்கியிருக்கிறார்கள். மேலும், எண்ணெகொல்புதூர் அணைக்கட்டிலிருந்து கால்வாய் அமைத்து கிருஷ்ணகிரி பெரிய ஏரிக்குத் தண்ணீர் கொண்டு வர வேண்டுமென்ற எங்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, அதனைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். இப்படி எண்ணற்ற திட்டங்களை எங்கள் பர்கூர் தொகுதி மக்களுக்கு வழங்கியிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு, இந்த நேரத்திலே நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவருக்கு உறுதுணையாக இருந்து இந்த ஆட்சியை வழி நடத்திக் கொண்டிருக்கின்ற அண்ணன் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பர்கூர் சட்டமன்றத் தொகுதியில் மகாதேவகொல்லஹள்ளி ஊராட்சி, துயில் போங்கனூர் என்ற கிராமத்தில் 5,000–க்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்றன. அதேபோல, அஞ்சூர் ஊராட்சியில் அஞ்சூர் என்ற கிராமத்திலும் 5,000–க்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்றன. அங்கே கறவை மாடுகளை மக்கள் அதிகமாக வைத்திருக்கிறார்கள். அந்தக் கறவை மாடுகளின் மூலமாக நிறைய பாலை கறந்து பொது மக்களுக்கு விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். அங்கே கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் நீண்ட நாட்களாக கோரிக்கை வைத்து வருகிறார்கள். அந்த 2 கிராமங்களிலும் கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை துறைக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கந்தசாமி அவர்கள்.

திரு. ப. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிமராமத்து திட்டம் தந்த குடிமராமத்து நாயகனே! நொய்யல் நதியை மீட்டெடுத்த நொய்யல் நாயகனே! பள்ளிக் குழந்தைகளை all pass செய்து, பள்ளிக் குழந்தைகளுடைய மனதிலே பதியும் வண்ணம் அற்புதமான திட்டங்களைக் கொண்டு வந்த கல்வி புரட்சியாளரே! கூட்டுறவு நிறுவனங்களில் 6 பவுன் வரை அடகு வைத்து, ஏழையெளிய மக்கள் பெற்றிருக்கிற அனைத்து பேருடைய நகைக் கடன்களையும் தள்ளுபடி செய்து, ஏழையெளிய மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கின்ற ஏழையெளிய மக்களின் முதலமைச்சரே! கொரோனா நோய்த்தொற்றுக் காலத்திலேகூட, அரசு ஊழியர்களுக்கும் முத்தான திட்டங்களைக் கொண்டுவந்து, முழு சம்பளத்தையும் அவர்களுக்குக் கொடுத்து, இன்றைக்கு

அவர்களின் ஓய்வுபெறும் வயதை 60 ஆக உயர்த்தி, அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே! மும்முனை மின்சாரத்தை விவசாயிகளுக்குக் கொடுத்து அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கி, முத்தான திட்டங்களைக் கொண்டு வந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்திலே மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன். அரசின் அனைத்துத் திட்டங்களுக்கும் உறுதுணையாக இருந்த மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் எனது நன்றியை உரித்தாக்குகிறேன்.

உள்ளாட்சியிலே நல்லாட்சி செய்து, 148 விருதுகளைப் பெற்றுத் தந்த எங்களுடைய கொங்கு மண்டலத்தின் தளபதி; சூலூர் சட்டமன்ற இடைத் தேர்தலில் சட்டமன்ற உறுப்பினராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகியிருந்தாலும்கூட, 20 ஆண்டுகளில் இல்லாத வளர்ச்சியை என்னுடைய தொகுதிக்குக் கொடுத்து, தொகுதி மக்களிடத்திலே எனக்கு மாறாத மாட்சிமைமிக்க ஆதரவைப் பெற்றுக் கொடுத்து, 50 ஆண்டுகளில் இல்லாத வளர்ச்சியை கொங்கு மண்டலத்திலே, 5 ஆண்டுகளில் கொடுத்த மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை வணங்குகிறேன். அதேபோல, என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் உள்ள அனைத்து மக்களையும் வணங்குகிறேன். அனைத்துத் திட்டங்களையும் எங்களுக்குக் கொடுத்து உதவிய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும் இந்த நேரத்தில் வணங்குகிறேன். சக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் வணங்குகிறேன்.

சூலூர் தொகுதிக்குட்பட்ட அப்பநாய்க்கன்பட்டி கிராமத்தில் கிட்டத்தட்ட ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆடுகளும், கால்நடைகளும் இருக்கின்றன. எங்களுடைய தொகுதியைப் பற்றி தெள்ளத் தெளிவாகத் தெரிந்த மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள், அந்தப் பகுதியில் ஒரு கால்நடை மருத்துவமனையை அமைத்துக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சூலூர் தொகுதி

2021 பிப்ரவரி 27]

சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை துறைக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.

முற்பகல் 10–55

திருமதி மு. சந்திரபிரபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா எனும் தெய்வத்தை முதற்கண் வணங்குகின்றேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடு, நாள்தோறும் நல்ல பல திட்டங்களைத் தீட்டி அவற்றைச் சிறப்பாகச் செயல்படுத்திக்கொண்டிருக்கின்ற, பள்ளி, கல்லூரி மாணவர்கள் மனதிலும், தமிழக மக்கள் மனதிலும் நீங்கா இடம் பிடித்திருக்கிற நம்முடைய குடிமராமத்து நாயகர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஐயா அவர்களை முதற்கண் வணங்குகின்றேன். கட்சிக்கும், ஆட்சிக்கும் உற்ற துணையாக இருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன். எங்களுடைய விருதுநகர் மாவட்டக் கழகச் செயலாளரும், பால் வளத் துறை அமைச்சருமான மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அண்ணன் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், என்னுடைய சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வருகிற சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்று, இதே அவையில் அமைச்சர்களாகவும், சட்டமன்ற உறுப்பினர்களாகவும் வருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியோடு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்குப் பேச வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான அரசுக் கலைக் கல்லூரியை அமைத்துக் கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு உற்ற துணையாக இருந்த, எங்கள் மாவட்டச் செயலாளர், மாண்புமிகு